பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ தோற்றம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஐப்பசி 10 (26—10—72) வியாழன் — வெளியூர்: ஐப்பசி 11 (27—10—72) வெள்ளி [இதழ்: 110

அமெரிக்கத் தலைவர் தேர்தல் பிரச்சாரம்-- செலவு பற்றித் தகவல்

வாஷிங்டன், அக். 26—

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தலில் சனநாயகக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடும் செனட்டர் மக்கவர்னின் தேர்தல் பிரசாரச் செலவுக்காக மொத்தம் ரூ. 16 கோடி தேவைப்படும் என்று அக்கட்சியின் நிதி ஆலோசகர்கள் கூறுகின்றனர்.

நிக்சனின் தேர்தல் பிரச்சாரத்திற்கு ரூ. 32.85 கோடி செலவாகுமென்று அவருடைய ஆலோசகர்கள் மதிப்பிடுகின்றனர்.

கழக அரசைக் கவிழ்க்கச் சதி

காரணத்தை உருவாக்க டில்லிக்குக் கிடைத்த முதல் மனிதர் எம். ஜி. ஆர்.

நினைப்பு நிறைவேறினல் பொங்கியெழும் கிளர்ச்சியை எந்தச் சக்தியும் தாங்கிக்கொள்ள இயலாது

கழகத் தலைவர் கலைஞர் திட்டவட்ட அறிவிப்பு

குத்தாலம், அக். 26—

"திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கவிழ்க்க எடுத்துக்கொண்ட முயர்சியின் முதற்கட்டம்--எம்.ஜி.ஆர். பிரச்சினை; இரண்டாவது கட்டம்--கம்யூனிஸ்டுக் கட்சியின் தீர்மானம்; இப்படிச் சதி முயற்சி நடந்துகொண்டிருக்கிறது!

'இந்தியாவிலேயே தனியாக ஒரு எதிர்க் கட்சி ஆட்சி நடத்துவது தமிழ்நாட்டில் தான்; அது தி மு. கழக ஆட்சிதான்!

" அதற்குச் சேதாரம் ஏற்படுத்த யாருக்காவது நினைப்பு இருந்தால்--அந்தக் கழக அரசைக் கவிழ்க்க யாருக்காவது நினைப்பு இருந்தால்--அவர்கள நினைப்பு நிறைவேறிய பிறகு--தமிழ்நாட்டில் பொங்கி எழுகின்ற பிரளயத்தை, உலகத்தில் எந்தச் சக்தியும் தாங்கிக்கொள்ள முடியாது என்று எச்சரிக்கை செய்கிறேன்!"

என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், நேற்று குத்தாலத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில், கழக அரசைக் கவிழ்க்க நினைப்போருக்கு அறிவுறுத்தினர்.

பொதுக்கூட்டத்திற்கு குத்தாலம் வட்ட தி. மு. க. செயலாளர் ஜோசப் தலைமை வகித்தார்.

தோழர்கள் முகிலன், இராசமாணிக்கம் எம் எல்.ஏ., எஸ். டி. சோமசுந்தரம் எம்.பி., தஞ்சை நடராசன், கோவை இராமநாதன், சுபரவேலு எம்.பி., அமைச்சர்கள் மு. கண்ணப்பன், மன்னை நாராயணசாமி, அன்பில் தர்மலிங்கம், திருமதி சத்தியவாணிமுத்து ஆகியோர் உரையாற்றினர்.

சூழ்ச்சி வலை பின்னப்படுகிறது

இறுதியில், முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பேசியதாவது:—

"என்னைச் சந்தித்த பத்திரிகை நிருபர் மிகுந்த ஆர்வத்துடன், 'எம். ஜி. ஆர். பிரச்சினையினுல் அரசாங்க நடவடிக்கை பாதிக்கப்பட்டுவிட்டதாமே' என்று கேட்டார்; ஏன் அப்படிக் கேட்டார் என்பது நமக்குப் புரியும்--'இந்தப் பிரச்சினையினுல் அரசாங்க இயந்திரம் சுழலவில்லை; அரசாங்க இயந்திரத்தின் சக்கரம் பழுதுபட்டுவிட்டது; சட்டம்--ஒழுங்கு கெட்டுவிட்டது' எனக் கூறி, அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குக் காட்ட வேண்டிய காரணம் ஒன்றைக் கண்டுபிடிக்க அலைகிறார்கள் என்பதால் தான்!

இந்தியாவின் பூகோளப் படத்தை எடுத்துக்கொண்டு, 'ஒவ்வொரு கட்சியின் ஆட்சிக்கும் ஒவ்வொரு வர்ணம்' என்று தீட்டினுல, தமிழ்நாட்டிற்கு மட்டும் தான் தனி வர்ணம் இருக்கும்.

அப்படி, இந்தியா முழுவதும் ஒரே கட்சி ஆட்சி நடக்கிறது--தமிழகத்தைத் தவிர!

டில்லியில் இருப்பவர்களுக்கு வேண்டியவர்கள் சிலர் இங்கே இருந்துகொண்டு, 'இந்தியாமுழுவதும் ஒரே வர்ணமாக இருக்கக்கூடாதா' என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்; அதற்காக இங்கே இருக்கின்ற வண்ணத்தை அழிப்பதற்குக் காரணம் தேடுகிறார்கள்!

தி. மு. கழக ஆட்சியைக் கவிழ்ப்பதற்குக் காரணத்தை உருவாக்க அவர்களுக்குக் கிடைத்த முதல் மனிதர் எம் ஜி ஆர்.

"எடுத்தவுடனேயே நீங்கள் இந்திரா காங்கிரசுக்கு வந்துவிட்டால் மக்கள் தூற்றுவார்கள்; ஆகவே, அடிக்கடி நீங்கள் எந்த அண்ணாவின் பெயரைச் சொல்கிறீர்களோ அந்த அண்ணாவின் பெயரைச் சொல்லி கட்சியைத் துவக்குங்கள்; சிலருக்குச் சபலம் ஏற்பட்டு உங்கள் பின்னுல் வருவார்கள்; பிறகு பார்த்துக் கொள்ளலாம்"

என்ற சூழ்ச்சி வலை பின்னப்பட்டிருக்கிறது; அதற்கேற்பத் தான், வலது கம்யூனிஸ்டுக் கட்சியின் மாநிலச் செயற்குழு கூடி,

"தமிழ்நாட்டில் அமைதி குறைந்துவிட்டது; எம். ஜி. ஆர். ரசிகர்களை தி. மு. கழகத்தினர் அடிக்கிறார்கள்--உதைக்கிறார்கள்; தடையுத்தரவு தண்ணீர்பட்ட பாடாகிவிட்டது; ஆகவே, இந்த அரசு வெளியேற வேண்டும்"

என்று தீர்மானம் போட்டிருக்கிறது!

பொதுமக்களே--இதனை எண்ணிப் பாருங்கள்!

வழி வகுக்கும் பிரச்சினையில

இதுவரை வெளிவந்த செய்திகளில் தாக்கப்பட்டவர்கள் யார், யார்--அமைச்சர் மன்னை நாராயணசாமி தாக்கப்பட்டார்; தா. கிருஷ்ணன் எம்.பி. தாக்கப்பட்டார்!

அமைச்சர்கள் நாவலர்--புதுவை முதல்வர்--ப. உ. சண்முகம்--க. இராசாராம் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டங்களில் கலவரம்!

தர்மபுரியில் மாறன் கார் மீது கல் வீச்சு!

திருத்தணியில் கா. வேழவேந்தன் கார் படுநாசம்!

35 பஸ்கள் சேதமடைந்தன--5 பஸ்கள் நாசமாயின!

இவற்றையெல்லாம் செய்தது யார் என்பதை நாடு அறியும்.

ஆனுலும் அவர்கள், 'நாட்டில் சர்க்கார் இயங்கவில்லை' என்று சொன்னுல்தான் மாநில அரசைக் கவிழ்க்க முடியும!

அப்படிப்பட்ட ஒரு பயங்கரச் செயலில் மத்திய அரசு ஈடுபட வழி வகுக்கும் முதல கட்டம்—எம.ஜி.ஆர். பிரச்சினை; இரண்டாவது கட்டம—வலது கம்யூனிஸ்டுக் கட்சியின் தீர்மானம்!

நிதானம் தவறுகிருர்

காஞ்சிபுரத்தில் பேசும்போது எம ஜி.ஆர். அவர்கள், 'நான தான அண்ணுவின் உண்மையான தம்பி; கருணுநிதியை, அண்ணு நம்பவேயில்லை' என்று கூறியிருக்கிருர்!

மக்கள், தி. மு. கழகத் தலைவர்கள் பேச்சையும கேட்கிருர்கள--எம். ஜி. ஆரின் பேச்சையும் கேட்கிருர்கள்; 'யாருடைய பேச்சு தரக்குறைவாக இருக்கிறது' என்பதை மக்கள் முடிவு செய்து கொள்வார்கள்.

'கருணுநிதியை, அண்ணு நம்பவில்லை' என்கின்ற அளவுக்கு எம். ஜி. ஆர். 'விஷயதானம்' செய்யத் தொடங்கிவிட்டார்!

அது மட்டுமல்ல; எம்.ஜி.ஆர். அவர்கள், அறிஞர் அண்ணு அவர்களுக்கு மருத்துவச் சிகிச்சை செய்தது பற்றிய பிரச்சினையைக்கூட இழுக்கத் தொடங்கிவிட்டார்!

அண்ணுவுக்கான மருத்துவமனைச் செலவை அவர் ஏற்றுக்கொண்டாராம்; நல்லது—அது உண்மையாகவே இருக்கட்டும்; யாருக்குச் செய்தார் அந்தச் செலவை--நம்மை ஆளாக்கிய தலைவனுக்குத்தானே? அப்பிரச்சினையையா இப்போது இழுப்பது?

நம்மையெல்லாம் கண் விழிக்கச் செய்த தலைவனின் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தபோது செய்த செலவுகளைப் பற்றியா இப்போது பேசுவது? எப்படிப்பட்ட மோசமான நிலைக்கு எனது இனிய நண்பர் எம். ஜி. ஆர். இறங்கிவிட்டார்?

நீதி விசாரணைக்கு வைக்கத் தயாரா?

காஞ்சிபுரத்தில் பேசிய எம். ஜி. ஆர்., 'அண்ணுவின் தோதலுக்குக் கருணுநிதியிடமும்--நாவலரிடமும் பணம் கொடுத்தேன்' என்று கூறியதாக நண்பர்கள் சொன்னுர்கள்; அந்தத் தலைவனுக்குத் தந்த பணம் பற்றிய பிரச்சினையையா இப்போது இழுப்பது?

அவர் அப்படிச் சொல்லிவிட்டதால் திருப்பிக் கேட்கிறேன்--'நீங்கள் கொடுத்த பணம் உங்களது வருமான வரிக் கணக்கில் இருக்கிறதா? எதற்கெடுத்தாலும் நீதி விசாரணை கோரும் நீங்கள், அந்தக் கணக்கை நீதி விசாரணைக்கு உட்படுத்துவீர்களா' என்று!

நம்பிக்கையைக் கெடுப்பதுதான் மிக மோசமாகும்

'அண்ணு அவர்கள் கருணுநிதியை நம்பவில்லை' என்று எம். ஜி. ஆர். [illegible]றுகிருர்; ஆனுல் அண்ணு அவர்கள், 'தண்டவாளத்தில தலை வைத்துப் படு' என்றுலும், 'அமைச்சர் பதவி ஏற்றுக்கொள்' என்றுலும், இரண்டையும் ஒரே உணர்ச்சியுடன் ஏற்று பணிபுரிபவன் தம்பி கருணுநிதி' என்றுதான் கூறியிருக்கிருர்; ஆனுல் 'அண்ணு கருணுநிதியை நம்பவில்லை' என்கிருர் எம. ஜி. ஆர்.; பரவாயில்லை--அதை வாதத்திற்காக ஏற்றுக் கொண்டு கூறுகிறேன்:—

'நம்புவது' என்பது ஒன்று; 'நம்பிக்கை இல்லாமல் இருப்பது' என்பது இன்னென்று; அதைவிட மோசம், நம்பிக்கையைக் கெடுப்பது!

'கழகத்தைக் காப்பாற்றுவார்கள்' என்றுதான் அண்ணு அவர்கள் நம்பிக்கையோடு மறைந்தார்கள்[illegible]

அ[illegible] எம். ஜி. ஆர். எ[illegible]ர்? கழகத்தை உ[illegible]--நாமோ கழகத்தை [illegible]க்கிருேம்!

ஆகவே, [illegible]றையில் உள்ள அண்ணன் இப்போது, 'எம். ஜி. ஆரை நம்பி ஏமாந்து போனேமே' என்றுதான் நினைப்பார்! 'நாம் நம்பாத' கருணுநிதிதானே கழகத்தைக் கட்டிக் காக்கிருன்' என்றல்லவா அந்த அண்ணன் எண்ணுவார்?

நாவலரைப் பற்றி எவ்வளவு மோசமாக எம். ஜி ஆர். பேசியிருக்கிருர்?

'நாவலர் ஒரு ரப்பர் ஸ்டாம்பு' என்கிருர்; ஆனுல், அண்ணுவோ அவரை, நடமாடும் பல்கலைக் கழகம்' என்ருர்.

ரப்பர் ஸ்டாம்பு அல்ல--'தம்பி, வா--தலைமை ஏற்க வா' என்று அழைக்கப்பட்ட பொதுச் செயலாளர் அவர்; ஆனுல், 'ரப்பர் ஸ்டாம்பு' என்கிருர் எம் ஜி.ஆர்.

இலக்கியத் தேன்மழை பொழியும் நாவலர் பேச்சைக் கேட்டால்--கழகத் தலைவராக நான் இருந்தாலும்--அவரது பேச்சைச் சுவைக்கும் சாதாரண மனிதனுகிவிடுவேன்; ஆனுல், அவரை 'ரப்பர் ஸ்டாம்பு' என்கிருர் எம். ஜி. ஆர்.

எம்.ஜி.ஆர். அவர்களைக் கேட்டுக்கொள்வேன்--என் மீது எவ்வளவு அவதூறுகளை வேண்டுமானுலும் வீசுங்கள்--பழிமொழிகளை வீசுங்கள்--ஏசல்களைத் தூக்கி எறியுங்கள்--வேதனை வேல்களை விட்டெறியுங்கள்--நான் தாங்கிக் கொள்கிறேன்; ஆனுல் எங்கள் நாவலரை--பேராசிரியரை--கழக அமைச்சர்களை--கழக முன்னணியினரை--கழகச் செயல் வீரர்களை மட்டும் ஏதும் குறை கூருதீர்கள்' என்ற, ஆனுல் அவர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள்!"

கழகத் தோழர்களே-- கொதிப்படையாதீர்!

கழக நண்பர்களே--உங்களுக்கு ஓர் அன்பு வேண்டுகோள்--அவர்கள் அடிக்க அடிக்க அவர்களது அடிகளைத் தாங்கிக் கொள்ளுங்கள்!

கேவலமாகப் பேசுகின்ற பேச்சுக்களைத் தாங்கிக்கொள்ளுங்கள்!

நம்மைத் தவருன வழிக்கு இழுக்க அவர்கள் ஆத்திரமூட்டக்கூடும்--தவறிப்போய் அந்த வழி போய்விடாதீர்கள்!

தாக்கினுல் திருப்பித் தாக்காதீர்கள்!

மன்னை நாராயணசாமி அடிபட்டாலும்--கழக முன்னணியினர் அடிபட்டாலும்--ஏன்--நானே அடிபட்டாலும்--அதையும் தாங்குகின்ற இதயத்தைப் பெற்றுச் சரித்திரம் படைக்க வாரீர்! கொதிப்போ--கொந்தளிப்போ அடையாமல் அமைதி காத்து, 'நாம்தான் அண்ணன் வழி வந்தோம்' என்று நிரூபியுங்கள்!

கைமேல் பலன் கிடைக்கும் இலட்சணம்

'புரட்சி நடிகர்' என்ற பட்டம் தந்தோம்--பாராட்டு நடத்திப் பூரித்தோம்! ஆனுல் அவர்கள் தருவது என்ன--கல்வீச்சும் கடுமொழி வீச்சும்தான்!

எனது படங்கள் நொறுக்கப்படுகின்றன--எனது படங்களுக்கு செருப்பு மாலை' போடப்படுகிறது.

'இந்தக் கைமாறு நமக்குப் போதும்' என்ற புன்னகையோடு இருங்கள்!

(4-ம் பக்கம் பார்க்க)

மக்களை ஈர்க்க வகையற்ற கோழைகளின் வன்செயல்

மிரட்டலுக்கு அஞ்சும் கோழைகள் அல்லர் நாங்கள் -- எதிர்ப்புகளை -- சோதனைகளைச் சந்தித்தவர்கள்

'தனிக் கடை' வைக்கச் சென்றுவிட்டவர்களின் போக்கு -- அமைச்சர் ப. நாராயணசாமி கண்டன முழக்கம்

"அரசியலில் நே[illegible] -- கருத்துக்குக் கருத்து -- கொள்கைக்கு [illegible] வைப்பதுதான் ஆண்மை. இருட்டில் நின்[illegible] கற்களை வீசுவதில் என்ன இருக்கிறது? அ[illegible] கருத்துக்களை எடுத்துக் கூறி மக்களை ஈர்க்க வகையற்ற கோழைகள்தான் இத்தகைய வன்செயலில் ஈடுபடுவார்கள்.

"நம்மோடு போராடி தோற்றவர்கள்தான் இப்போது நம்மை எதிர்க்கிறார்கள்; உல்லாச வாழ்வு வாழ்ந்தோர், அவர்களுடைய சுகபோக வாழ்வு நம்மால் பறிக்கப்படுகிறதே என்பதால் எதிர்க்கிறார்கள்; இங்கே தங்களது வியாபாரம் எடுபடவில்லை என்பதற்காகச் சிலர் தனிக் கடை வைக்கப் போய்விட்டார்கள்!

"இவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து கொண்டு தமிழ்நாட்டின் அமைதியைக் குலைத்து -- நீண்ட பல காலமாகத் தமிழ்நாட்டிற்கு இருந்துவரும் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்த முனைந்திருக்கிறார்கள்.

"பெரிய பெரிய மன்னாதி மன்னர்களை எல்லாம் தோற்கடித்த நாம், இன்றைக்கு யாரோ ஒரு பகல் வேடதாரி பின்னால் பத்துப் பேர் விசிலடிக்கச் செல்வதைப் பார்த்துப் பயப்பட வேண்டியதில்லை.

"எத்தனையோ எதிர்ப்புகளை -- சோதனைகளைச் சந்தித்தவர்கள் நாம்! இது போன்ற எதிர்ப்புக்களுக்கு அஞ்சப் போவதில்லை"

என்று உணவு அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி அவர்கள், இராமநாதபுரம் அரண்மனை முன்பாக நடைபெற்ற தி. மு. க. பொதுக்குழு தீர்மான விளக்கப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி விளக்கினார்.

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் பரம்பரை விரோதிகள் தற்போது ஏற்பட்டிருக்கின்ற நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு கழகத்தை அழித்திட முயற்சிக்கிறார்கள்; தமிழ்நாட்டின் அமைதியைக் குலைத்து மக்களுக்குத் துரோகம் செய்திடத் துணிந்திருக்கிறார்கள்; 'அம்பட்டவர்களைச் சமாளிக்க தமிழக அரசு தயாராக இருக்கிறது; தவறு யார் செய்தாலும் குற்றம் குற்றம்தான்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் பேசுகையில் அமைச்சர் விளக்கியதாவது:—

கற்களை வீசிக் கலவரம் செய்தால், எடுத்துக் கூறவேண்டிய கருத்துக்களைச் சொல்லாமல் போய்விடுவோம் என்று நினைக்காதீர்கள்.

இந்தக் கல்லடிக்கும் -- கலவரத்திற்கும் நாங்கள் அஞ்சியவர்கள் அல்லர்; இதற்கெல்லாம் அஞ்சாது, சொல்லவேண்டிய கருத்துக்களைக் கல்லடிகளையும் -- எதிர்ப்புக்களையும் சமாளித்துக்கொண்டு விடாது சொல்லி வந்தவர்கள்தான் நாங்கள்!

மிரட்டல்களுக்குப் பயந்து பின்வாங்குபவர்கள் அல்லர் நாங்கள்; அரசியலில் எங்களைக் கோழைகளாக அறிஞர் அண்ணா அவர்கள் விட்டுச் செல்லவில்லை.

பெரிய பெரிய இராஜாக்களையும் -- ஜமீன்தார்களையும் -- மிட்டா மிராசுகளையும் நாங்கள் பார்த்தவர்கள்தான்; அவர்களுக்காக எல்லாம் நாங்கள் பயந்து கொண்டு பின்வாங்கியிருந்தால் இந்த அளவுக்குக் கழகம் வளர்ந்திருக்குமா?

எந்தவிதப் பாதுகாப்புமின்றி தன்னந்தனியாக நாடு முழுவதிலும் பட்டிதொட்டிகள் எல்லாம் சுற்றுப்பயணம் செய்து சுயமரியாதைக் கருத்துக்களை -- சமுதாயச் சீர்திருத்த எண்ணங்களை -- அரசியல் விழிப்புணர்ச்சியூட்டும் கொள்கைகளை எடுத்துச் சொல்லி வந்தவர்கள்தான் நாங்கள்!

தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக -- தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காகக் கழக அரசு பாடுபட்டு வருகிறது; இதற்காகக் கடந்த 30 ஆண்டுக் காலமாக அரும்பாடுபட்டோம்; கல்லடியும் -- சிறைவாசமும் ஏற்றோம்.

இன்றைக்கு அண்ணா அவர்கள் அமைத்த ஆட்சியைக் கொண்டு ஏழை எளிய மக்கள் நல்வாழ்விற்காகப் பாடுபட்டு வருகிறோம்.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே சிறந்த நிர்வாகத் திறனால், ஏழை எளிய மக்கள் நல்வாழ்வுக்குரிய சீரிய பல திட்டங்களைச் செயல்படுத்தி வருவது நமது தமிழ்நாடு மட்டும்தான்!

இப்படிப்பட்ட அரசைக் கவி[illegible] விட முடியாதா என்[illegible] கள் சந்தர்ப்பத்தை[illegible] பார்த்துக் கொண்டி[illegible] கள்! சமயம் நேரும்[illegible] லாம் அவர்கள் இப்படிப்பட்ட வன்முறைக் கைவரிசையைக் காட்டித்தான் வருகிறார்கள்!

'விவசாயிகள் போராட்டம்' என்ற பெயரால் எதிரிகள் ஒன்று கூடி வன்முறையின் கடைசி எல்லைவரை சென்றார்கள்; ஆனால், இறுதியில் வன்முறை தோற்றது; இப்போது, 'ஒட்டுக் காங்கிரசுத் தலைவர்' பிரச்சினையை, 'புளிய மரம்' என்று நம்பிப் பிடித்திருக்கிறார்கள்; அது புளியமரமல்ல -- முருங்கை மரம் -- சடசடவென முறிந்துவிடும்!

இந்தச் சலசலப்பு கொஞ்ச நாளைக்கு இருக்குமென்று எங்களுக்குத் தெரியும்; நீண்ட காரியங்களை மக்கள் அனுமதிக்க மாட்டார்கள்.

இதற்கெல்லாம் சரியான தீர்ப்பை நாட்டு மக்கள் வழங்கத்தான் போகிறார்கள்!

அறிஞர் அண்ணா அமைத்த கழகத்தை -- கழக அரசை -- தியாகத்தால் வளர்த்த சக்தியை ஒட்டுக் காங்கிரசுத் தலைவர் கேவலப்படுத்துகிறார்; அறைகூவல் விடுகிறார்; இது நமக்கு விடுத்த அறைகூவல் அல்ல -- அறிஞர் அண்ணா அவர்களுக்கே விடுத்த அறைகூவலாகும்.

நமது நீண்ட நாள் எதிரிகள் -- பரம்பரை விரோதிகள் எல்லாம், இன்றைக்கு ஒட்டுக் காங்கிரசுத் தலைவரின் 'தாசர்'களாகி விட்டார்கள்! அவரைப் பயன்படுத்தியாவது கழகத்தை அழிக்க முடியாதா -- கழக அரசைக் கவிக்க முடியாதா என்று நினைக்கிறார்கள்!

இன்றைக்கு கழக அரசு ஏற்பட்டிருக்காவிட்டால் குடிசை மாற்றுத் திட்டமும், ஏழைக் குடிசைவாழ் மக்களுக்கு நல்ல வீடுகளும் கிடைத்திருக்குமா?

ஏழைக் குடியானவர்களுக்குக் குடியிருப்பு மனைகள் சொந்தமாக்கப்பட்டிருக்குமா?

கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்குமா?

பஸ்கள் தேசிய மயமாக்கப்பட்டிருக்குமா?

சென்னைக்குத் தமிழ் நாடு என்ற பெயர் ஏற்பட்டிருக்குமா?

இப்படி எத்தனையோ சாதனைகள் -- இந்தச் சாதனைகள் எல்லாம் கழக அரசு இல்லாமல் வேறு ஒரு அரசு இருந்தால் நடைபெற்றிருக்கும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

வன்முறையாளர்கள் இன்றுள்ள நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு -- சமூக விரோதிகளுக்குக் கதவைத் திறந்து விட்டு இந்த நாட்டில் என்னென்ன செய்யத் திட்டமிட்டிருக்கிறார்களோ தெரியாது; ஆனால், இந்தச் சதித் திட்டத்தை மக்கள் முறியடித்தே தீர்வார்கள்!

இன்றைய ஆர்ப்பாட்ட போர்ப்பாட்டுக்கள் எல்லாம் புஸ்வாணம்போல சிறிது நாட்களுக்குள் பிசுபிசுத்துவிடத்தான் போகிறது! உண்மை நிலையை மக்கள் உணரத்தான் போகிறார்கள்!

அறிஞர் அண்ணாவின் கொள்கைகளைத் தகர்த்தெறியப் புறப்பட்டுள்ள இந்தப் புல்லர்களின் முகமூடி கிழியும் நாள் வெகு தொலைவில் இல்லை!

அதுவரை மக்கள் அமைதியுடன் தங்கள் ஆதரவை கழகத்தின் பக்கம் தொடர்ந்து அளித்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

தொழிலாளர் பிரச்சினை -- கழக அரசின் தீவிர அக்கறை

கல்வியமைச்சர் நாவலர் தெளிவுரை

திருப்பூர், அக். 26—

ரூ. 40 000 செலவில் கட்டப்பட்ட திருப்பூர் திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றப் பேரவையின் புதிய கட்டடத்தைக் கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்தார்.

தொழிலாளர் பேரவைத் தலைவர் முனுசாமி தலைமைவகித்தார்.

கோவை மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ். ஏ. இராசமாணிக்கம் எம்.எல்.சி., க. துரைசாமி எம்.எல்.ஏ., புஞ்சைப்புளியம்பட்டி சாமிநாதன் எம்.பி., நகர தி.மு.க. செயலாளர் முருகேசன், திருப்பூர் நகர மன்றத் தலைவர் கந்தசாமி ஆகியோர் விழாவில் பங்கேற்றனர்.

கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:—

"அண்ணா அவர்களின் அறவழியில் நின்று பணியாற்றுமாறு தொழிலாளத் தோழர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றுள்ள அரசியல் கட்சிகள் பல, முதலில் தொழிற் சங்கங்களைத் தொடங்கி அவற்றின் ஆதரவில் கட்சிகளை வளர்த்து வந்துள்ளன.

கழகம் ஒன்றுதான் தொழிற் சங்கங்களின் மூலம் கட்சியை வளர்த்துக்கொள்ளாமல் தன் [illegible]தரவினை மட்டும் அளித்தது.

[illegible]ம்யூனிஸ்டுக் கட்சியினரைப் போன்றவர்களோ, தொழிற் சங்கங்களின் மூலமே அறிமுகமாயினர்; கொள்கைகளை -- [illegible]கருத்துக்களை -- வாதங்களை எடுத்துச் சொல்லி -- லெனின் தத்துவங்களை எடுத்துக் கூறி அவர்கள் அறிமுகமாகவில்லை.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தொழில் துறையில் அமைதி நிலவ ஒரு முக்கியக் கோட்பாட்டினை வலியுறுத்தி வருகிறார்; அதன்படி, 'ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கமே இருக்க வேண்டும்; அவற்றில் தொழிலாளரே பொறுப்புக்களை ஏற்க வேண்டும்; அவர்கள் அரசியலிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும்' என்று வலியுறுத்தி வருகிறார்கள்.

கழக அரசின்கீழ் தொழிலாளர் சமூகம் பல சலுகைகளைப் பெற்றுள்ளது.

தொழிலாளர்களது பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்ப்பதில் கழக அரசு தீவிர கவனம் வருகிறது.

வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கத் தொழில் அமைதி நிலவ வேண்டும்."

கோவை மாவட்டத்தில் தீவிரக் குடும்பநலத் திட்ட இயக்கம்

பெங்களூர், அக். 25—

கோவை மாவட்ட குடும்ப நலக் கழகம் நடத்திவரும் தீவிரக் குடும்ப நலத் திட்ட இயக்கத்தின் விளைவாக, அந்த மாவட்டத்தில் 11,000-க்கு மேற்பட்ட ஆண்களுக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது; செப்டம்பர் மாத மத்தியில் துவக்கப்பட்ட இந்த இயக்கம் அக்டோபர் இறுதி வரையில் நடைபெறும்.

கோவை மாவட்டத்திலுள்ள 41 வட்டாரங்களிலும் சுகாதார விடுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன; அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர், இந்த விடுதிகளில் ஆறு நாட்கள் தங்கி ஓய்வு பெறுகிறார்கள்.

இந்த நாட்களில் ஏற்படக்கூடிய ஊதிய இழப்பை ஈடுசெய்வதற்காக இவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ 60 கொடுக்கப்படுகிறது.

கோவை மாவட்டம் தமிழ்நாட்டிலுள்ள மிகப்பெ[illegible] மாவட்டமாகும்; நிரந்தரக் கருத்தடை முறைகளை ஏற்றுக்கொள்ளும் தகுதி வாய்ந்த 3 79 இலட்சம் தம்பதிகள் இம்மாவட்டத்தில் வசிக்கின்றனர்; இவர்களில் ஒரு இலட்சம் பேர் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளனர்.

சத்துணவின் பெருமை

மக்களிடையே பரப்புவதற்குத் தீவிர முன்னோடித் திட்டம்

புதுடில்லி, அக். 25—

சத்துணவு பற்றிய விவரங்களை மக்களிடையே பரப்புவதற்கானத் தீவிர முன்னோடித் திட்டம் ஒன்றுக்கு நான்காவது திட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ரூ. 3 30 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

எந்தச் சக்தியும் எங்களை அழிக்க இயலாது

பொறுமையாக இருக்கிறோம் -- கோழைகள் எனக் கருதாதீர்

உயிரைக் கொடுத்தும் கழகத்தைக் காப்போம் -- அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் சூளுரை

திருச்சி, அக். 26—

"எந்த இலட்சியத்துக்காக -- கழக ஒற்றுமைக்காக -- கட்டுப்பாட்டுக்காக பேரறிஞர் அண்ணா அவர்கள் பாடுபட்டாரோ அதை மறந்தவர்கள் -- மதிக்கத் தவறியவர்கள், எப்படி அண்ணா பெயரில் கட்சி தொடங்க முடியும்? அண்ணா இதயத்தில் இடம் பெற முடியும்?

"கழகத்தின் வளர்ச்சிக்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட கலைஞரை மதிக்கத் தவறியவர்களால் அண்ணா பெயரைச் சொல்ல எப்படித் துணிவு வருகிறது?

"வன்முறையில் ஈடுபட்டால் கட்சியை அழித்துவிடலாம் என்று யாரும் கனவு காண வேண்டாம்; வீணாக மாணவர்களைப் பயன்படுத்தி அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தி விடலாம் என்றும் நினைக்காதீர்!

'நாங்கள் ஏழைகள்தான் -- ஆனால் கோழைகள் அல்லர்; பொறுமையாக இருக்கின்றோம் என்பதற்காகக் கோழைகளாக இருந்துவிடுவோம் என்று நினைத்துவிடாதீர்கள்!

"கட்சிக்குச் சிறிது ஆபத்து என்றாலும் தன் உயிரைக் கொடுத்தேனும் கழகத்தைக் காப்போம் என்று இணைந்து செயல்படும் எங்களை எந்தச் சக்தியாலும் அழித்துவிட முடியாது!

"எம் ஜி. ஆர். தற்போது நடத்திவரும் இயக்கம், தி. மு. கழகத் தலைவர்கள் மீது சேற்றை வாரியிறைப்பதுபோல் இருக்கிறது; அவருடைய ஆதரவாளர்களின் ஆர்ப்பாட்டங்கள் விரைவில் அடங்கிவிடும்"

என்று அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள், திருச்சி டவுன் ஹால் மைதானத்தில் நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுத் தீர்மான விளக்கப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் தெளிவுற விளக்கிக் கூறினார்.

எம். ஜி. ஆர். மீது தி. மு. கழக மேலிடம் நடவடிக்கை எடுத்ததற்கான காரணங்களை விளக்கினார்; கட்சிப் பணிகளில் தீவிரமாக ஈடுபடும்படி கழக ஊழியர்களைக் கேட்டுக் கொண்டார்; ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடாமல் படிப்பில் கவனம் செலுத்தும்படி மாணவர்களைக் கேட்டுக் கொண்டார்.

கூட்டத்திற்கு, மாவட்டச் செயலாளர் எம். எஸ். வெங்கடாசலம் தலைமை தாங்கினார்.

திரு. மா. முத்துசாமி எம்.பி. அவர்கள், கழக அரசின் சாதனைகளை விளக்கிப் பேசினார்.

திரு. எம். இராஜாங்கம் எம்.பி. அவர்களின் மறைவுக்கு கூட்டத்தில் இரங்கல் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"பிரச்சினைக்குரிய ஒரு பிரச்சினையைப் பற்றி இந்தக் கூட்டத்தில் பேசவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டதே என்று உண்மையிலேயே வருத்தப்படுகிறேன்.

பொதுவாக தி. மு. கழகப் பொதுக்குழு — செயற்குழுவில் நல்ல பல திட்டங்கள் தீட்டப்பட்டு, அதைச் செயலாற்றுகின்ற வழிகளை விரைவாகக் கடைபிடிக்க வேண்டும் என்று அரசுக்கு எடுத்துச் சொல்வோம்.

ஆனால் அண்மையில் நடந்த செயற்குழு -- பொதுக்குழுவில் எம். ஜி ஆர். மீது நடவடிக்கை எடுக்கும் தீர்மானம் பற்றிப் பேச வேண்டிய நிலைமையை எம். ஜி. ஆர். உருவாக்கிவிட்டு விட்டார்.

பொதுக் கூட்டத்தில் பேசக்கூடாததைப் பேசியதால் எம்.ஜி.ஆர். கட்சியிலிருந்து தள்ளி வைக்கப்பட்டார்; இருந்தாலும், பலவிதங்களில் சமரச முயற்சிகளை மேற்கொண்டோம்.

தந்தை பெரியாரும் -- எம். ஜி. ஆரும் சந்தித்துப் பேசினார்; ஆனால் அவருக்குக்கூட எம். ஜி. ஆர். மதிப்புக் கொடுக்கவில்லை.

இப்போது எம்.ஜி.ஆர். 'அண்ணா தி. மு. கழகம்' என்ற பெயரில கட்சியைத் தொடங்கி 'எதையும் செய்யலாம்' என்று செயல்பட்டு வருகிறார்.

அண்ணாவின் பெயரை கட்சிக்கு வைக்க எம். ஜி. ஆருக்கு என்ன தகுதி இருக்கிறது?"

'தொழில் துறையிலே மற்றவர்களின் வளர்ச்சியைக் காணச் சகியாதவர்'

'இயக்க வளர்ச்சியில் ஆர்வம் கொண்டவர்களையும் பாதிக்கச் செய்தவர்'

'ஏழ்மையிலும் ஏற்றமுடன் வளர்ந்த கட்சி வளம் பெற்றபோது வந்துசேர்ந்தவர்களின் உண்மைநிலை -- அமைச்சர் என். வி. நடராசன் வேதனைமிக்க விளக்கம்

நெய்வேலி, அக். 26—

'தன்னுடைய தொழில் பாதையில் வந்த போட்டியாளர்களை வீழ்த்திய இன்றைய 'ஒட்டுக் காங்கிரசு'த் தலைவர் எம். ஜி. ஆர்., தனது அரசியல் பாதையில் எப்படி மற்றவர்களை வாழ்த்தி வளர்க்க முடியும்? 'அண்ணாவின் பாதையில் செல்கிறேன்' என்று எப்படிக் கூறிக் கொள்ள முடியும்?"

என்று கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், நெய்வேலியில் நடைபெற்ற தி. மு. கழக விளக்கப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி வினவினார்.

கூட்டத்திற்கு நகர தி. மு. க. செயலாளர் பி. வி. சீனிவாசன் தலைமை தாங்கினார்.

மாவட்ட தி மு. க. செயலாளர் எம். செல்வராஜ் எம்.எல்.சி. மற்றும் பலர் பேசினர்.

அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தி. மு. கழகம் வளர்ந்த ஆரம்ப நாட்களில் அண்ணாவுடன் இன்றைய முத்த தலைவர்களும் -- நானும் சென்னையின் முக்கிய வீதிகளில் 'போஸ்டர்'களை விடிய ஒட்டியிருக்கிறோம்; 100 'போஸ்டர்'களை அச்சடிக்க அப்போது ஒரு ரூபாய் கூலி; அதைத் தெருவெல்லாம் ஒட்ட அரை ரூபாய் கூலி; அதற்காகக்கூட எங்களிடம் அப்போது போதிய வசதி இல்லை; அண்ணாவின் ஆலோசனைப்படி நள்ளிரவில் ஓரிடத்தில் கூடுவோம்; அண்ணாவும் -- நாங்களும், ஏணியை ஒருவர் -- பசை டப்பாவை ஒருவர் -- 'போஸ்டர்'களை ஒருவராகச் சுமந்து சென்று தெருவெல்லாம் ஒட்டுவோம்; பின்பு கடைசியில், 'சிங்கிள் டீ' மட்டும் குடித்துவிட்டுத் தூங்குவோம்.

இப்படி ஏழ்மையிலும் ஏற்றமுடன் வளர்த்த கட்சி இது!

இது வளம்பெற்ற நிலையில் இதில் வந்து கலந்தவர்கள் இதன் பெருமையை எப்படி அறிய முடியும்?

அப்படி வந்து கலந்தவர்கள் கட்சியை அழிக்க முனைகிறார்கள் என்றால் -- அதுவும் அண்ணாவின் பெயரையும், படத்தையும் போட்டே இக்காரியத்தில் ஈடுபடுகிறார்கள் என்றால், இந்தக் கொடுமையை எப்படித் தாங்கிக்கொள்வது? அண்ணாவையும் -- அவரும் நாங்களும் பட்ட இன்னல்களையும் மறந்தவர்கள் செயல்தான் இது' என்றுதானே கூற முடியும்?

நாங்கள் அமைத்த உயிரினும் மேலான கழகக் கொடியின் அமைப்பில் சிறிது மாற்றம் செய்து அவர்கள் அமைப்பது -- அதில் ஆங்காங்கே கிடைக்கும் அண்ணாவின் படங்களை நடுவில் ஒட்டி வைப்பது -- அதை ஒரு தனிக் கட்சிக் கொடியாய் அமைப்பது என்று ஆரம்பித்துள்ளனர்.

கொடியில் ஒட்டப்பட்ட அண்ணா படம், காற்று -- மழையால் கீழே உதிர்ந்து விழுகிறது; இதைச் சரியாகப் புரிந்துதானோ என்னவோ -- கலைஞர் இங்கக் கும் பல, 'ஒட்டுக் காங்கிரசு' என்று வர்ணித்துள்ளார்.

கழகத்தில் ஒரு சிலர் இவரை நம்பி பின் தொடரப் போகிறார்கள் என்று கேள்விப்படுகிறேன்: அவர்களுக்கு ஒன்று கூறிக் கொள்வேன்; 'இவர், இவரது தொழில்துறையிலும்கூட கட்சியைச் சேர்ந்த சக நடிகர்களின் வளர்ச்சியைக் காணச் சகியாதவர்; நமது இயக்க வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட எஸ். எஸ். ஆர். போன்ற பல சக நடிகர்களின் வளர்ச்சியைப் பாதித்தவர்; அவர்களது முன்னேற்றத்தை ஆதரிப்பவராக இவர் இருந்திருந்தால், மற்றவர்களையும் பிரகாசிக்க வைத்திருக்க முடியும்; இதனை இவர்கள் உணர வேண்டாமா' என்று!"

அரசியல் அனுபவம் இல்லாதவர்

அவரைப்பற்றி இனி நமக்குக் கவலையில்லை

அரைகுடம் தளும்புவதில் வாய்ப்பு ஏதும் இல்லை

கடலூர் புதுநகர் தங்கராஜ் மைதானத்தில் நடந்த தி. மு. க. பொதுக்குழுத் தீர்மான விளக்கப் பொதுக்கூட்டத்தில் தொழிலாளர் நல அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் பேசியதாவது:—

"எம். ஜி. ஆர். அரசியல் அனுபவம் இல்லாதவர்; அதை அவரே மெய்ப்பித்துக் காட்டிவிட்டார்!

பெரியார் அவர்கள், யாரையும் -- யாருக்காகவும் சமாதானம் செய்துவைக்க எப்போதுமே முயன்றது இல்லை; அப்படிப்பட்டவர், 'அண்ணா வளர்த்த கழகம் -- அவர் உருவாக்கிய கழகம் பிளவுபடக் கூடாது' என்ற எண்ணத்தில் எம். ஜி ஆரை அழைத்து வருத்தம் தெரிவிக்கும்படி கூறினார்; அவர் சொன்ன யோசனையை ஏற்றிருந்தால், எம். ஜி ஆருக்கு புதிய அத்தியாயம் தொடங்கியிருக்கும்; ஆனால் மறுத்துவிட்டார்.

தி. மு. கழகத்திலிருந்து செயலாற்றும் எண்ணம் அவருக்கு இல்லை; கணக்கைத் தீர்த்துக்கொண்டு புதுக் கட்சி தொடங்கிவிட்டார்; இனி அவரைப் பற்றி நமக்கு வரவு -- செலவு கிடையாது.

கழகத்தை காமராசரோ -- பக்தவத்சலமோ எதிர்த்தால் பதில் சொல்ல உற்சாகம் ஏற்படுகிறது; ஆனால், கழகத்தால் வளர்ந்த ஒருவரே பின்னால் இருந்து குத்துகிறார்; ஆகவே, அவரைப் பற்றி பேசுவது கழக நிலைக்கு ஏற்றதல்ல -- ஒதுக்கித் தள்ளப்பட வேண்டியவராக ஆகிவிட்டார்!

எம். ஜி. ஆர். -- கழகம் வளர்ந்த பிறகு சேர்ந்தவர்; முதலில் நாடகத்தில் சிவாஜியாக நடிக்க எம். ஜி. ஆரை அண்ணா அழைத்தார்; அவரோ, 'நான் வரவில்லை, என்று சொல்லிவிட்டார்.

பிறகு, பி.சி. கணேசனை அழைத்து -- அவருக்குப் பயிற்சி தரப்பட்டுச் சிறப்பாக நடித்தார்; பெரியாரால், சுயமரியாதை மாநாட்டில், கணேசனுக்கு 'சிவாஜி' பட்டம் தரப்பட்டது; அதைப் பார்த்துவிட்டு 'புகழ்வரும்'என்று எண்ணி 1954-ம் ஆண்டில் கழகத்தில் சேர்ந்தவர்தான் இந்த எம் ஜி.ஆர்.; அவர் 'பாரத்' பட்டம் வாங்கியிருக்கிறார்; அது நமக்கு சிறப்புதான்' ஆனால், பெரியாரிடம் வாங்கும் பாராட்டு இருக்கிறதே -- அது இந்த 'பாரத்' பட்டத்தைவிட ஆயிரம் மடங்கு பெரியது.

எம். ஜி. ஆருக்கு ஒரு வழக்கம் உண்டு; தன்னைப்போல் பின்னால் ஒருவர் தயாராகக்கூடாது என்று மற்றவர்களை மட்டம் தட்டுவார்!

'நான்தான் கழகம் -- கழகம்தான் நான்' என்பது எவ்வளவு திமிரான பேச்சு!

கழகத்தை உருவாக்க -- கட்டிக் காத்து வளர்த்த அண்ணா அப்படிச் சொல்லியிருந்தால் தகும்; ஆனால் அவர் சொல்லவில்லை; 'நீங்கள் இல்லை என்றால் கழகம் இல்லை -- கழகம் இல்லையென்றால் நான் இல்லை' என்றுதான் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

அவரோ நிறைகுடம் -- தளும்பவில்லை; ஆனால் இவரோ (எம். ஜி. ஆர்.) அரை குடம் தளும்புகிறது.

'வன்முறையைத் தூண்டுபவரா அண்ணா பற்றிப் பேசுவது?'

'எந்த நிலையிலும் தி. மு. கழகம் உறுதியுடன் இருக்கும்'

அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா கண்டன முழக்கம்

கடலூர், அக். 26—

"இப்போது நடக்கும் வன்முறைக்குக் காரணம் எம். ஜி. ஆர்.-தான்; கலவரத்தையும் - வன்முறையையும் தூண்டிவிட்டு, 'அண்ணா தி. மு. க.' என்று தனது கட்சிக்குப் பெயர் வைத்திருக்கிறார்; இவர் எந்தக் கலவரத்தைத் தூண்டினாலும் தி. மு. கழகம் அழியாது -- உறுதியுடன் இருக்கும்"

என்று அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள், நீலகிரி மாவட்டம் கூடலூரில் நடைபெற்ற தி. மு. க. பொதுக்குழுத் தீர்மான விளக்கக் கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்; அவர் மேலும் கூறியதாவது:—

"1949-ம் ஆண்டு அண்ணா அவர்களால் தொடங்கப்பட்ட தி. மு. கழகம், இன்று ஆட்சிபீடத்தில் அமர்ந்துள்ளது; இதற்குக் காரணம், கட்சித் தொண்டர்களின் உழைப்புதான்.

கழகத் தலைவர்கள் யாரும் பதவிக்கு ஆசைப்பட்டுக் கட்சியில் சேரவில்லை -- மக்களுக்குத் தொண்டு செய்யத்தான் கட்சியில் சேர்ந்திருக்கிறோம்.

10 ஆண்டுகளுக்கு முன்பு கழகத்திலிருந்து சம்பத் விலகினார்; சிறு சலசலப்பு இருந்தது -- அவ்வளவுதான்.

அதேபோல், எம். ஜி. ஆர். இப்போது கழகத்திலிருந்து போய்விட்டார்; அவர் போனதால் கழகம் அழிந்துவிடாது.

திராவிடர் கழகத்திலிருந்து அண்ணா விலகி தி. மு. கழகத்தைத் தொடங்கினார்; அப்போது கழகத்தில் எம். ஜி. ஆர். இல்லை; கலைஞர் -- நாவலர் போன்ற தலைவர்கள்தான் இருந்தார்கள்.

ஆகவே எம். ஜி. ஆர். போனதால் கழகத்துக்கு நட்டம் எதுவும் இல்லை.

கழகத்தில் உள்ளவர்கள் கணக்குக் காட்ட வேண்டும் என்று கூறும் எம். ஜி. ஆர்., கடைசியாக 1969-ம் ஆண்டில்தான் கணக்குக் காட்டினார்; அதற்கு பிறகு காட்டவில்லை; ஏன் காட்டவில்லை என்பதற்குப் பதில் கூறுவாரா?

கட்சிக் கட்டுப்பாட்டை மீறி பொதுக் குழுவில் பேச வேண்டியதை வெளியில் பேசியிருக்கிறார்; அப்படிப்பட்டவர், தான் பேசியதற்கு வருத்தம் தெரிவிக்காமல் அண்ணா பற்றிப் பேசுகிறார்; அவர் அண்ணா பற்றிப் பேசக்கூடாது -- வன்முறையை தூண்டும் வகையில் பேசக் கூடாது."

துரோகத்திற்குத் துணை போனவர் தூற்றவும் தொடங்கிவிட்டார்

'தனிக் கடை' திறந்தவர் வரலாற்றை மறந்தார்

மூன்று திங்களுக்கு முன்னரே ஒரு முடிவுக்கு வந்தவரின் போக்கு -- அமைச்சர் இராசாராம் கண்டன விளக்கம்

பாண்டிச்சேரி அக். 26

"தி. மு. கழகம், தனிப்பட்ட ஒருவருக்குச் சொந்தமான இயக்கமல்ல; தனிப்பட்டவர் எத்தனைப் பெரிய மனிதராக இருந்தாலும் கழகத்திலே அவர் ஒருவராகவே பாவிக்கப்படுவார்!

'கழகத்தால் எம் ஜி ஆர். வளர்ந்தார்; அத்தகைய கட்சிக்கு இன்று அவர் துரோகம் செய்யத் துணிந்து விட்டார்''

என்று அமைச்சர் க. இராசாராம் அவர்கள், பாண்டிச்சேரி ஒதியஞ்சாலை நகர் மன்ற அரங்கில் நடைபெற்ற தி. மு. கழகம் பொதுக்குழுத் தீர்மான விளக்கம் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்குப் பாண்டிச்சேரி முதலமைச்சர் எம். ஓ. எச். பாரூக் தலைமைதாங்கினார்.

அமைச்சர் க. இராசாராம் அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"பாண்டிச்சேரி நாடாளுமன்ற உறுப்பினரும் -- மத்திய அமைச்சருமான மோகன் குமாரமங்கலம், 'தமிழகத்தில் அரசியல் புயல் வரப்போகிறது' என்று மூன்று மாதங்களுக்கு முன்பே சொன்னார்.

இ. காங்கிரசுக் கட்சியினர், 'தி.மு. கழக ஆட்சியை நாங்கள் கவிழ்க்க மாட்டோம்; ஆனால், தி.மு.க.-வில் உள்ளவர்களே கட்சியைக் கவிழ்த்தால் அதற்கு நாங்கள் பொறுப்பாளி அல்லர்' என்று கூறிவந்தனர்.

இவற்றையெல்லாம் இப்போது கூர்ந்து பார்த்தால், கழகத்தை விட்டுப்போவது என்ற முடிவுக்கு 3 மாதங்களுக்கு முன்பே, எம் ஜி. ஆர். வந்துவிட்டார் என்பதை உணர முடிகிறது.

தி. மு. கழகத்தை அவர் செப்டம்பர் 15-ந் தேதி தூற்றத் தொடங்கினார்; இன்றைக்குத் தனிக் கடை வைத்துவிட்டார்.

சம்பத் பிரிந்து போனபோது 3 மாதங்களிலேயே காமராசரின் காங்கிரசில் கலந்தார்; இன்று அவர் பக்கத்திலிருந்து பிரிந்து இந்திரா காங்கிரசில் போய் ஒட்டிக் கொண்டார்; இது வரலாறு!

எம்.ஜி.ஆரால் தேர்தலில் வெற்றி பெற்றோம் என்கிறார்கள்; பாண்டிச்சேரி, அரியாங்குப்பம் தேர்தலுக்கு எம்.ஜி.ஆர். வந்தாரே -- கழகம் தோல்வி அடையவில்லையா?"

உறுவையார் தி. மு. க.

புதுவை மாநிலம் உறுவையார் தி. மு. க. கிளை அமைப்புக் கூட்டம் 6—9—72-ல் நடைபெற்றது; அதுபோது புதுவை வட்டத் துணைச் செயலாளர் மா. வேணுகோபால் அவர்களை ஆணையாளராகக் கொண்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

அவைத் தலைவர்: தா. இராமச்சந்திரன்; செயலாளர்: சி. மீனாட்சிசுந்தரம்; துணைச் செயலாளர்: அ. க. செல்வக்கணபதி; பொருளாளர்: இரா. மாணிக்கசாமி; வட்டப் பிரதிநிதி: மு. பழனிநாதன்; மற்றும் 8-பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

தந்தை பெரியார் உண்மை நிலை விளக்கம்

தி. மு. கழகத்தை ஒன்றும் செய்துவிட முடியாது

இயன்றவரை தொல்லை கொடுக்க எதிரிகள் அரும்பாடுபடுகின்றனர்

ஏமாற்றம் அடையப் போகிறார் எம். ஜி. ஆர். -- கிடைக்கும் ஆதரவின் உண்மை நிலை

ஒரு தனிக் கட்சியாக நின்று – இந்தியாவே ஏற்கும் நிலையில் தன் காலிலேயே துணிந்து நின்று – சுயநலமற்ற இரண்டொரு கட்சிகளுக்கும் ஆதரவு அளித்து – இந்திய ஆட்சியைத் தன் கையில் வைத்திருக்கும் கட்சிக்கும் உதவி செய்து – அவர்களது மானத்தையும் காத்து – தன் காலிலேயே வலுவோடு நின்று வருகிறது தி. மு. கழக ஆட்சி !

இந்த ஆட்சியை யாராலும் அசைக்க முடியாது என்பதைக் கண்டுகொண்ட எதிரிகள் – சமயசஞ்சீவி பிழைப்புக்காரர்கள், தி. மு. க. கட்சியில் உள்ள – ஒரு 'அய்யோ பாவம்' என்று சொல்லப்பட்ட ஒருவரைச் சுவாதீனப்படுத்திக்கொண்டு, அவர் பெயரால் இன்று எதிர்ப்பை நடத்திவருகிறார்கள் !

எதிர்ப்பு என்றால் – துவக்கம்முதல் இந்த நிமிடம் வரையில், கலகம் -- காலித்தனம் -- நாசவேலை -- இழிசெயல் -- இழிமொழி முதலிய கூடாத காரியங்களையே கை ஆயுதமாகக்கொண்டு, கட்சிக்கும் -- பொதுமக்களுக்கும் -- அரசாங்கத்திற்கும் தொல்லையையும் நட்டத்தையும், சங்கடத்தையும், உண்டாக்கி வருகிறார்கள் !

இந்தக் காரியங்கள் இன்னும் எவ்வளவு உச்சக் கட்டத்திற்கும் போனாலும், தி. மு. கழகத்தை அசைக்க முடியாது என்பது ஒரு சிறுபிள்ளைக்குக்கூடத் தெரிந்த ஒன்றானாலும், 'கூடுமானவரையில் தொல்லை கொடுப்போம் -- கெட்ட பெயரை உண்டாக்க முயற்சிப்போம்' என்கின்ற முறையில் எதிரிகள் அரும்பாடுபட்டு வருகிறார்கள் !

இதில் பெருத்த ஏமாற்றம் அடையப் போகிறவர் எம். ஜி. ஆர். ஆவார்கள் ; கிளர்ச்சி வலுக்க வலுக்க எம். ஜி. ஆருக்குத்தான் பலவீனம் ஏற்படக்கூடுமே ஒழிய, தி. மு. க.-வை ஒன்றும் செய்துவிட முடியாது ; ஏனென்றால், எம். ஜி. ஆர். இன்று 'சைபரி'ல் இருந்து முன்னேற வேண்டியவராக இருக்கிறார் ; அவருக்கு உள்ள ஆதரவு என்பது, 'எம். ஜி. ஆருக்கு அளிக்கப்பட்ட ஆதரவு அல்ல -- எம். ஜி. ஆர். வளரவேண்டும் என்ற கவலைகொண்டு அளிக்கும் ஆதரவும் அல்ல -- தி. மு. க.-வை ஒழிக்கப் பார்க்கும் ஆதரவுகளே ஆகும்' என்பதுதான் !

தி. மு. க.-வை ஒழிக்கப் பார்க்கும் ஆதரவு என்றால், அது ஏன் ? தி. மு. க. ஒரு நிலையான ஆட்சியாக ஆகிவிட்டது என்பதால்தான் !

சாறு எடுத்த சக்கையாகி விடுவார் எம். ஜி. ஆர்.

எம். ஜி. ஆர். யார் என்றும் -- அவர் நிலை எது என்றும் ஒன்றுமே எனக்குத் தெரியாது ; சில திருமண நிகழ்ச்சிகளில் பார்த்திருக்கிறேன் ; சில தி. மு. கழக நிகழ்ச்சிகளில் பார்த்திருக்கிறேன் ; வணக்கம் தெரிவித்துக் கொண்டதல்லாமல் ஒரு நிமிட நேரமாவது அவருடன் பேசியதாக எனக்கு ஞாபகம் இல்லை.

தி. மு. கழகத்தில் அவருக்குச் சம்பந்தம் ஏற்பட்ட பிறகுதான், அரசியல் வாழ்வில் பிரஸ்தாபிக்கப்படும் தன்மையை அவர் அடைந்தார் ; மற்றும் பல விஷயங்களுக்கு நன்கொடை வழங்குவதாலும் பிரபலமடைந்தார்.

அண்ணா இருந்தபோது அவருக்கு இருந்த பெருமையைவிட, அண்ணாவிற்குப் பிறகு அதிகப் பெருமை -- பிரபலம் அவருக்கு ஏற்பட்டது என்றாலும், சினிமாத் துறையில் வளர்ச்சி ஏற்பட்டதாகச் சொல்வதற்கில்லை.

அவருக்கு 'இன்கம்டாக்ஸ்' விஷயமாய் தொல்லை இருப்பதாகச் சொல்லப்பட்டதுடன், அதனால் அவருக்கு மனச் சங்கடம் இருப்பதாகவும், அதற்குப் பரிகாரம் தேடுவதில் அதிகக் கவனமாகவும் -- முயற்சியாகவும் இருக்கிறார் என்றும் சொல்லப்பட்டு வந்தது.

இந்த நிலையின் மூலமாக அவருக்கு மனக்குழப்பமும் பல யோசனைகளும் தோன்றுவது இயற்கையே ஆகும் ; அதன் பயன்தான் இன்றைய அவருடைய குழப்ப நிலைக்குக் காரணம் என்பது எனது கருத்து ; அப்படி இல்லாவிட்டால், நான் அவரை அழைத்துக் கேட்டுக்கொண்டதற்கு ஒரு பதிலும் தெரிவிக்காமல், 'யோசிக்கிறேன் -- யோசித்துச் சொல்லுகிறேன்' என்று சொல்லவும், எனது கருத்தை அலட்சியப்படுத்தவும் அவர் துணிந்திருக்க மாட்டார் !

'இப்படிப்பட்ட ஒரு நிலையில் இருக்கிறீர்கள்' என்[illegible] அ[illegible]ம் சூசனையாகவே தெரிவித்தேன் ; அதற்கு மட்டும் [illegible] ஒன்றும் இல்லை ; நான் வேறு எந்தக் கட்சியிலும் [illegible]' என்று சொல்லிப் போனார் ; பிறகு இன்றைய [illegible]டு விட்டது ; இந்த நிலை கழகத்தை ஒன்றும் பா[illegible]து ; கழகத்திற்கு தொல்லையைக் கொடுக்கும் -- அவ்வள[illegible] இது எல்லாக் கட்சிக்கும் சகஜம்தான் !

அதிகாரத்திலும் ஆட்சியிலும் இருப்பவர்களுக்குத் தொல்லை இருந்துகொண்டுதான் இருக்கும் ; ஏனெனில், தோற்றவர்களும் -- ஏமாற்றம் அடைந்தவர்களும் -- சுயநலக்காரர்களும் -- எப்போதுமே -- வெற்றி பெற்று பதவியில் இருப்பவர்களுக்கு எதிரிகளே ஆவார்கள் ; அவர்களுடைய எதிரிக்கு -- வெற்றி பெற்றவர்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருப்பதுதான் மனக் குறைக்கு ஒரு பரிகாரமாகும்.

இந்தக் கூட்டத்திற்கு அவர்கள் அயோக்கியர்களாக இருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை -- மனக்குறையே போதுமானது ; இந்தச் சமயம் எம். ஜி. ஆர். அவர்களே இல்லாவிட்டாலும், ஏதாவது ஒரு சாக்கையாவது கண்டுபிடித்துத் தொல்லை கொடுத்துக்கொண்டுதான் இருப்பார்கள் ; இதில் ஒன்றும் அதிசயம் இல்லை !

இதில் பொதுமக்கள் சிந்திக்க வேண்டியதெல்லாம், காங்கிரசுக்காரர்கள் ஆட்சிக்காலத்தில் மக்களுக்கு ஏற்பட்ட நன்மை என்ன -- தீமை என்ன ? தி. மு. க. ஆட்சிக் காலத்தில் மக்களுக்கு -- தமிழர் சமுதாயத்திற்குச் சமுதாயத் துறையிலும் -- கல்வித் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் -- அரசியல் நலத் துறையிலும் ஏற்பட்ட நன்மை என்ன -- தீமை என்ன என்பது பற்றித்தான் சிந்திக்க வேண்டும் ; இதுதான் மக்களுடையவும், குடிகளுடையவும் புத்திசாலித்தனமாகும் ; மற்றவைகளை எதிரிகளுக்கு விட்டுவிட வேண்டும் ; அதாவது, இந்த ஆட்சி மாறினால் எவர் ஆட்சி ஏற்படும் -- இதற்குமுன் அன்றைய ஆட்சியில் -- எதிரிகள் ஆட்சிக் காலத்தில் மக்களுக்கு ஏற்பட்ட நன்மை என்ன — தீமை என்ன என்பவைகளைப் பற்றிச் சிந்திக்கப்பட வேண்டும்.

இப்போது தமிழர்கள் உஷாராக இருப்பதுடன், இன்றைய ஆட்சியைக் கண்ணைப்போல் பாதுகாக்கவேண்டும் ; சிறிது ஏமாந்தாலும் ஒழிந்தோம் என்று எச்சரிக்கை செய்கிறேன்.

எம். ஜி. ஆர். அவர்களுக்கு ஒரு அறிவுரை கூறுகிறேன் -- இதை ஜாடையாக நேரிலும் தெரிவித்துக்கொண்டேன் ; எம். ஜி. ஆர். அவர்கள் இப்போது எந்த அளவுக்கு எதிரிகளுக்குப் பயன்படுகிறாரோ அந்த அளவுக்கு அவரது சொந்த வாழ்வுக்கு — அவரது கலைத் துறைக்கு தாழ்வு ஏற்படும் என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன்.

பொதுவாகவே இனி சினிமா -- கலைத்துறை தலையெடுக்காது ; அறிவும் எம். ஜி. ஆருக்கு அதில் பெரும் வீழ்ச்சி ஏற்படும் ; அப்போது எம். ஜி. ஆரை இன்றைய கழக எதிரிகள் சாறு எடுத்த கரும்புச் சக்கைபோல் ஆக்கிவிடுவார்கள் -- தூர எறிந்துவிடுவார்கள் !

சினிமாத்துறை இல்லாவிட்டால் எம். ஜி. ஆர். யார் ஆவார் ? எதற்காக எந்தக் கட்சியோ அல்லது மக்களோ அவரைப் பற்றிச் சிந்திப்பார்கள் ?

இன்றைய நிலையின் நெருக்கடி என்பது எம். ஜி. ஆருக்குத்தான் என வலியுறுத்தி எச்சரிக்கை செய்கிறேன். எதிர்காலம் அவருக்கு நல்வாய்ப்பு அற்றதாகிவிடும் என்பதாக எச்சரிக்கிறேன்.

—'சிந்திக்க வேண்டும்' -- 'எம். ஜி ஆருக்கு அறிவுரை' என்ற தலைப்புக்களில் 'விடுதலை' இதழில் எழுதிய தலையங்கங்களிலிருந்து.

வண்ணைப் பகுதி தி. மு. க. கூட்டம்

"சென்னை -- வண்ணைப் பகுதியின் சட்டமன்ற உறுப்பினர் -- மாநகராட்சி உறுப்பினர்கள் -- பகுதிக் கழக நிர்வாகிகள் அடங்கிய கூட்டம் 27—10—72 இரவு 8 மணியளவில், இராயபுரம் 'அறிவக'த்தில் நடைபெறும் ; அதுபோது, கழகப்பணிகள் குறித்து ஆலோசிக்க இருப்பதால், அனைவரும் அவசியம் கூட்டத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறேன்"

என்று பகுதிச் செயலாளர் பி. ஏ. என். இராசரத்தினம் அறிவிக்கிறார்.

கள்ள ரூபாய் நோட்டு கண்டுபிடிக்கச் சாதனம்

இலண்டன், அக். 25—

கள்ள ரூபாய் நோட்டுகளை எளிதில் கண்டுபிடிக்கக்கூடிய சாதனம் ஒன்று இலண்டனில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

'டிடக்டர் நோட்' எனப்படும் இந்தச் சாதனம், சிறிய டேப் ரிகார்டர் அளவில் இருக்கிறது ; தனிக் கருவிகளும் -- விளக்கும் இதனுள் உண்டு ; விளக்கைப் போட்டு -- மேலே பிளாஸ்டிக் தகட்டின்மேல சந்தேகப்படும் நோட்டை வைத்துப் பார்த்தால், 'அது நல்ல நோட்டா -- கள்ள நோட்டா' என்பது எளிதாகத் தெரிந்துவிடும். மிகத் துல்லியமான மாற்றங்களைக்கூட இந்தச் சாதனம் காட்டிக் கொடுத்துவிடும்.

மேலும், ரூபாய் நோட்டில் சோதிக்கவேண்டிய பகுதிகளான வரிசை எண் -- நீர்க்கோடு -- கையெழுத்து போன்ற பகுதிகள் பற்றிய குறிப்பு ஒன்றும் இதில் உள்ளது.

மருந்துகள் இறக்குமதி

ஊழலைத் தடுக்க அரசு யோசனை

புதுடில்லி, அக். 25—

பொதுவாக மருந்து உற்பத்திக் கம்பெனிகள் -- அதிலும் குறிப்பாக அந்நியக் கம்பெனிகளின் பங்கு மூலதனத்துடன் நடத்தப்படும் மருந்து உற்பத்திக் கம்பெனிகள் மொத்தமாக மருந்துகளையும், மூலப் பொருள்களையும் இறக்குமதி செய்கின்றன ; இத்தகைய இறக்குமதிகளில் ஊழல்களைத் தடுக்க தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதைக் குறித்து இந்திய அரசு யோசித்து வருகிறது.

பிளாகில் -- எரித்ரோமைசின் -- இந்தோமிதாசின் -- பூரோசமைட் போன்ற மருந்துகளை நாட்டு விலைகளைக் காட்டிலும் அதிக விலைக்கு விற்பதைக் கண்டு பிடித்ததையடுத்து நடவடிக்கைகளைப் பற்றி யோசித்து வருவதாகத் தெரிகிறது.

அரசாங்கம் தலையிட்டதன் மீது ஒரு கம்பெனி, 'பூரோசமைட்' விலையைப் பாதியாகக் குறைத்தது ; சில மருந்துகள் அரசாங்க வர்த்தக நிறுவனத்தின் மூலம் இறக்குமதி செய்யப்பட்டன.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] வெளியிடப்படுகிறது.

திருச்செங்கோடு வட்ட தி. மு. க. பிரதிநிதிகட்கு :

"27—10—72 காலை 10 மணிக்கு திருச்செங்கோடு வட்ட தி.மு.க. பிரதிநிதிகள் கூட்டம், அம்பாள் தியேட்டரில், அவைத் தலைவர் தி. கு. சண்முகம் அவர்கள் தலைமையில் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெறும் ; பொருள் : பொதுக்குழு நடவடிக்கையும் -- தீர்மானங்களும் ; பிரதிநிதிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று வட்டச் செயலாளர் என் ஏ. நடேசன் அறிவிக்கிறார்.

மணப்பாறை வட்ட தி. மு. க. பிரதிநிதிகட்கு :

"27—10—72 பிற்பகல் 2-மணியளவில், மணப்பாறை வட்ட தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம் மணப்பாறை பயணியர் விடுதியில் திருச்சி மாவட்டச் செயலாளர் எம். எஸ். வெங்கடாசலம் முன்னிலையிலும் -- வட்ட அவைத் தலைவர் எம். கே. மருதை தலைமையிலும் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெறும் ; அனைவரும் தவறாது வருகைதர வேண்டுகிறேன்"

என்று வட்டச் செயலாளர் சி. நா. வெங்குசாமி அறிவிக்கிறார்.

தமிழ்நாடு -- மைசூருடன் பஸ் போக்குவரத்து

கேரள அமைச்சர் தகவல்

திருவனந்தபுரம், அக். 28—

"மாநிலங்களுக்கிடையே பஸ் போக்குவரத்து நடத்தும் கேரள அரசின் யோசனைக்கு மைசூர் -- தமிழ்நாடு அரசுகள் ஆதரவு தெரிவித்திருக்கின்றன ; இது பற்றி அதிகாரிகள் மட்டத்தில் விரைவில் பேச்சுவார்த்தை நடைபெறும்"

என்று, கேரள சட்டமன்றத்தில், போக்குவரத்து அமைச்சர் கோவிந்தன் நாயர் தெரிவித்தார்.

கடலூரில் இலவசக் கண் சிகிச்சை முகாம்

இன்று முதல் தொடங்குகிறது

கடலூர், அக். 26—

தென் ஆற்காடு மாவட்டம் கடலூர் புதுநகரில் இன்று முதல் நவம்பர் 7-ந் தேதி முடிய இலவசக் கண் சிகிச்சை முகாம் நடக்கிறது.

இம்மாதம் 28-ந் தேதி முடிய கடலூர் பழைய மாவட்டக் கழகக் கட்டிடத்தில் கண் சிகிச்சைக்காகப் பெயர்கள் பதிவு செய்து கொள்ளப்படும்.

அந்த மூன்று நாட்களில் இலவசக் கண் சிகிச்சை பெற விரும்புவோர், தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

சென்னை -- எழும்பூர் கண் மருத்துவமனை டாக்டர் ஆபிரகாம் மேற்பார்வையில், அக். 29-ந் தேதி முதல் 31-ந் தேதி முடிய கடலூர் டவுன் ஹாலில் கண் அறுவைச் சிகிச்சை செய்யப்படும்.

அறுவைச் சிகிச்சை முடிந்ததும், நவம்பர் 7-ந் தேதி வரையில அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு முகாமில் தங்க இடமும் -- உணவும் -- கண்ணாடியும் -- இலவசமாக அளிக்கப்படும்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்னை நோக்கி இத்தகைய ஏசல் மொழிகள் -- இழிமொழிகள் வரும்போது என்ன நினைக்கிறேன் தெரியுமா -- 'அண்ணாவைப்போல் நீ முதலமைச்சர் ஆகி என்ன பயன் ? அண்ணா தாங்கிய ஏசலை -- அண்ணா ஏற்றுக்கொண்டதாகுதலை -- அண்ணாவின் குடும்பத்தைப் பற்றிச் சொன்ன அதே இழிமொழியை நீயும் தாங்கிக் கொள் ; அப்போதுதான் நீ அண்ணாவுக்கு உண்மையான தம்பி' என்று அவர்கள் கூறுவதாகத்தான் நான் எடுத்துக் கொண்டேன் !"